உ

கடவுள்துணை,

பெண்கள்ஜாதகமென்னும்

ருதுநூல்சாஸ்திரம்.

பரிகாரத்துடன்.



காப்பு-இத்தரையில் மானிடமென் றுருவுகொண்ட
இருபாலிற் பெண்களுட ருதுநூலப்பா
முத்திபெற்ற முன்னோர்கள் சொன்னவாக்கு
மொழியொன்றுந் தப்பாது முன்னோன்சாட்சி
சத்தசிவன் மால்சாட்சி குகனும்சாட்சி
சர்வவுயிரும் படைக்கும் பிரமன்சாட்சி
யெத்திசையும் பரிகாரத்தோடுசொன்னேன்
என்தாயார் சரஸ்வதியி னிருதாள்காப்பே.

இவைசிறுமணவூர்-முனிசாமிமுதலியாரியற்றப்பட்டு

ஆ. இரத்தினவேலுமுதலியாரது

வாணிவிலாசஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1902

சென்னை-நாராயணமுதலி-வீதி 52-நெ-வீடு.

ருதுவாகுமாசபலன்-விருத்தம்.

சித்திரையில் புருஷனுக்கு ஆகாதப் பா சுகமடைவாள் வைகாசிமாதமானால் புத்திரசம்பததாயிருப்பாள் ஆனிமாதம் புருஷரெலாமிச்சிப்பாள் ஆடிமாதம், சித்திரம்போல் பிள்ளைகளையீகுவெபெற்று சிறப்படைவாள் ஆவணியில் ருதுவேயானால், பதியுடன்விர்த்தியுண்டு புரட்டாசிக்கு பதிவிரதை யாயிருப்பாள் பரீட்சைபாரே,

சித்திரைமாததோஷத்திற்குசாந்தி.

சித்திரையில்ருதுவானதோஷத்திற்கு செய்யவேபரிகாரமுறையைக்கேளும், பத்தினிக்குப்புருடனுக்கும் புதியஆடைபாங்காகயுடுத்தியே குந்தவைத்து, முத்திலும்மதுவாரங்கள் செய்ததாக மண்கலயம்பிருவரிடசிரசில்வைத்து சுத்தசலம்வார்த்தபின்னர் சூறையிட்டு சுமங்கிலிக்கு ஆடைதனைதானஞ்செய்யே

ஆடிமாததோஷத்திற்கு சாந்தி.

ஆடிபிலேவடிவுகண்டபெண்தானப்பா அனைவரையுமிசசிப்பாளென்றதற்கு. தேடியேபலவிதபாங்கனிகளெல்லாந் தாம்பாளந்தன்னில்வைத்துதீவும்வைத்து கோடியென்றசேலைகட்டிகுந்தவைத்து குமரிக்கிகாட்டியதை திருஷ்டிசுத்தி ஆகின்றபிள்ளைகளாம்பலருக்கீந்தால் ஆடிமாத தோஷமதுமகன்றுபோச்சே

பாரப்பா அற்பிசியில்ருதுவேயானால்பிள்ளைகள்யீன்றெடுத்துவிதவையாவாள், பாரப்பாகார்த்திகையில்ருதுவேயானல்பலரையுமேதூஷிப்பாள்சோபியாவாள், பாரப்பாமார்கழியில் ருதுவேயானல்மக்களுண்டுபொருளுண்டுமனதுநோகாள், பாரப்பா தைமாதம் ருதுவேயானல் புண்யவதியாயிருப்பாள் பெருமைகொள்ளே.

அற்பிசிமாததோஷத்திற்குபரிகாரம்

அற்பிசியில் விதுவானதோஷத்திற்கு அப்பனேசாந்தியதுவரையைக்கேளு, கற்புடையசுமங்கிலியை கண்டழைத்துகருத்தாகஅப்பியங்கம்செய்துவைத்து, பொற்றாலிசெகப்பாடைமஞ்சள் குங்கமம்பூவுடனே தாம்பூலமிதுகளெல்லாம், சற்கொடைபோல் தானமதுசெய்வாயாகில் நாடாது அற்பிசியின் தோஷந்தானே.

கார்த்திகைமாததோஷத்திற்கு பரிகாரம்.

கார்த்திகைமாததோஷங் கடக்கவேசாந்திகேளு
பார்த்துநீசிவாலயத்தில் பசுவுடனெய்தானப்பா
வார்த்துநீதீபம்வைத்தால் வஞ்சிக்கோர்தோஷமில்லை
கீர்த்தியும்கவனமாக சித்தவர்கள்சொன்னவாக்கே

பெருமையுண்டு திரவியமுங்குறைவிராது பாக்கியவதியாயிருப்பாள் மாசிமாதம் அருமையடா!!பங்குனியில் ருதுவேயானல் ஆயுசுண்டுமக்களுண்டு அதிகமுண்டு மருமமாயிருந்து தடாயிந்நூல்தான் மண்டலத்திலனைவோர்க்கும்வேணுமென்றே, சிறுமணவூர் முனிசாமியெழுதிவைத்தான் சித்திரம்போல் எதிர்முழியாய்க்காணலாமே.

ருதுவாகும்வாரத்தின்பலாபலன்-

ஆமப்பாஞாயிறென்றகிழமையானால் ஐயையோவியாதியினால்
மெலிந்துபோவாள், ஆமப்பாதிங்களிலே ருதுவேயானால் அருந்
ததிபோலிருப்பாள் கற்புகாப்பாள், ஆமப்பாசெவ்வாயில்துக்க
முண்டுஅதிகசுகங்கிடையாதுவிதவையாவாள், ஆமப்பாபுதன்கி
ழமை பிள்ளையுண்டுபொருளுமுண்டு புத்தியுண்டுபுகழுண்டாமே

ஞாயிற்றுக்கிழமையின் தோஷத்திற்குபரிகாரம்

ஆதியாம்வாரந்தன்னில் ஆனதோர்மாதுநல்லாள்
வியாதியால்மெலிவாளென்று விளம்பியதோஷத்திற்கு
கோதுமையரிசியாலே குமரிக்குதிஷ்டிவாங்கி
வீதியில்அதிதிகட்கு விரைந்துமேதானஞ்செய்யே

செவ்வாய்க்கிழமையின்தோஷத்திற்கு பரிகாரம்

வீடுபோல்பந்தலதுபோட்டுமைந்தா வழியதற்குஇரண்டு புரவு
அமைத்துமேதான், நாடியேபெண்ணையொரு வழியாய்சென்றுக்
லமாகமுக்காடிட்டுபடுக்கச்சொல்லிதேடியேஒருமூலைநிலையமாம்
டி தேன்பொழியைமறுவழியாய்வரவேசொல்லு, ஓடியேவந்தபி
டன் அப்பியங்ஸ்தானம் உடனேசெய்துசிலதானங்கேளே.

தானமதுசுமங்கிலியை யழைத்துவந்து தக்கபடிஅப்பியங்கம்
செய்துவைக்க, வேணுமடாசிகப்புநிறசேலையொன்றுவெத்திலையு
ம்பாக்குமலர்பஞ்சள்குங்கும் ஆனமட்டும் சுயம்பாகம்இதுகளெ
ல்லாம் அறிவையர்க்குதானமதுசெய்தாயானல்காணுமேசெவ்
வாயின்கிழமைதோஷங்கண்காணாதோடுமடாதிண்ணமேதானே.

வியாழமென்றகிழமையிலேருதுவேயானல்விளம்பினேர்பாக்கி
யவதி யென்றேசொல்லி, தாழ்வில்லைவெள்ளியென்ற கிழமையா
னல் தன்புருஷன்மனம்போலே பணிகள்செய்வாள், பாழான
னிக்கிழமை ஆகாதையா படமுடியாதுன்பமடாதரித்திரியாவா
ள், ஏழானவாரபலன்இதுவேயாச்சுஇடம்பலனைச்சொல்லுகிறே
ம்லங்கிக்கொள்ளே.

சனிக்கிழமையின் தோஷத்திற்குபரிகாரம்.

பக்கமடாசனிக்கிழமைகொடிய தோஷம்பரிகாரம் செயபவெ
ன்றுக்உளவுகேளு, வெங்கலமாம்பாத்திரத்தில் எள்ளின்யெண்
ணைவார்த்தந்தப்பெண்ணமுகசப்பார்க்கச்சொல்லி, மங்காதபசு
ம்பாலை கறந்துவேறே மடக்கிலேவார்த்தந்த பெண்முன்காட்டி
எங்கொருவர்க்கானுலும் தானஞ்செய்தால் ஏகுமடாசனிக்கிழ
மைதோஷந்தானே.

ருதுவாகுமிடத்திற்குபலாபலன்

வீட்டுக்குவெளியில்விபசாரியாவாள்வனமென்ற பூந்தோப்பில்
சம்பத்துண்டு, வீட்டுக்குஉள்ளானல்ஒழுக்கமுண்டு வீடுதியெண்
றபடுக்கையிலே சுகமேயடைவாள், கேட்டுக்கொள்பகத்தொழு
வந்தன்னிலானல் கெடுதியில்லைபதிவிரதையாயிருப்பாள் நாட்டு
க்குள்நடக்கையிலே ருதுவானக்கால் நல்லதப்புசுகமடைவாள்
நம்புவாயே,

கம்படா நீர்க்கரையில் ருதுவேயானால் நல்லமனையுண்டு தேசு யுசன்வேப்படாபடுக்கையிலேருதுவானாக்கால் வளர்த்தெடுத்த தந்தையவிறந்துபோவான், கும்பமடா ஸ்திரீகளுக்கு நடுவேயானா ல் குற்றமில்லை தனசம்பத்தாயிருப்பாள், தெர்படாசொல்லையி லேருதுவானைக்கால் திரவியத்தேடேடுதிக பூமியுண்டாம்.

கிற்கையிலேருதுவானால் நன்றாய் வாழ்வாள் நிர்வாணமாயிரு ந்தால் கிலேசமப்பா, புசிக்கையிலேவெகுநன்மை யென்னலாகு ம் பிறர்வீட்டிலவனுக்கும்விரோதியாவாள்' மிக்கதொருகோ யிலிடந்தன்னிலானால் மேன்மையில்லையுபாயமதாய் வாழ்ந்திருப் பாள், தக்கதொருகிராமத்தின் மத்திலானால் தடையன்றி விப சாரியாவாள்பாரே.

ருதுவான யிடத்தைக்கொண்டு லக்கினந் தெரிந்துகொள்ளல்

குடியிருக்கும் வீட்டுக்குள்ருதுவேயானால் கூறடாமேஷலக்கி னங்குறித்துக்கொள்ளு, இடமானபசுத்தொழுவந் தன்னிலானா ல் ஏழுதடாரிஷபலக்கினமென்றுநீதான் வடிவழகநிர்வாணமா யிருக்கும்போது வடிவுகண்டால் மிதுனலக்கினமென்றே சொல் லு' தடமெனறநீர்க்கரையில் ருதுவானக்கால் தடையன்றி கட கலக்கினமென்றுசொல்ல.

சொல்லபபாவீட்டுக்குவெளியேயானால் சிங்கலக்னமென்றுசீ ராய்ச்சொல்லு, சொல்லப்பாபூவனத்தின் தோப்பிலானால் சொகு சானகன்னி யென்றலக்கினந்தானே, அல்லடாகிராமத்தின் மத் தியானால் வரையடாதுலாலக்கினமென்றுநீதான்' வில்லடா ஊ சல்வீட்டில்ருதுவனக்கால்விருச்சிகலக்கின மென்றியம்புவாயே

தன்வீட்டில் ருதுவானாளென்றுசொன்னால் தனுசென்றலக்கி னந்தான் தடையேதப்பா, பெண்ணவள்தான்கிணற்றருகே ருது வானக்கால் ரேசடாமகரலக்கினமென்றுநீதான், வெண்ணவே குளங்கரையிலானால் எழுதடாலக்கினமது கும்பமென்று பண்ணுவதுஸ்நானமும் நீராடும்போதும்பகாடா மீனலக்கினம் பெரியோர்வாக்கே.

மேற்கூறிய (௰௨) லக்கினங்களுக்கும் பலன்காண்க.

மேஷம்-தரித்திரம்	துலாம்-தனசம்பத்து
ரிஷபம்-சொற்பபுத்திரர்	விரிச்சிகம் விபசாரி
மிதுனம்-பதிபட்சமுடையவள்	தனுசு-உத்தமமத்திமமானவ
கடகம்-வெகுபுத்திரருண்டு	மகரம்-மானமில்லாதவள்
சிங்கம்-புருஷனை நீங்கிடுவாள்	கும்பம்-திரவியமுண்டு
கன்னி-பதிவிரதை	மீனம்புத்திரருண்டு

ருதுவாகும்போதுயார்பார்க்கிறார்களோ அந்தத் தெரிசனபலன் தானேதானகண்டாலுந்துக்கமப்பாதன் புருஷன்கண்டாலுந் துக்கமாகும், தேனனகன்னிகா ஸ்திரிகள் கண்டால் தெய்வபக்தி யோடு புண்யவதியென்பார்கள், வீரனைக்கம்பெண்கள்கண்டா ரானால் விதவையப்பா மங்கிலியமிழந்துபோவாள் . வாணனை யெ ண்ணையிட்ட தலையர்கண்டால்வனிதையவள் தரித்திரம் யனுப விப்பாள். வேசிகண்டாலபோகபாக்கியமாகயிருப்பாள்வியாதிய

ஸ்தர்கண்டாக்கால் நோய்தானப்பா, தாசியொத்தவெள்ளாட்டிக்கண்டாளாகில்தரித்திரமேயனுபவிப்பாள் தாணிமீது, கூச்சமில்லாமங்கிலிய ஸ்திரீகள்கண்டால்குறைவில்லைசுமங்கிலியாய்வாழ்ந்திருப்பாள், நீச்சமதஸ்ரீபுருஷர் யார்கண்டாலும் நெறிதவறிஜாதிவிட்டு நீங்குவாளே.

திதி-பலாபலன்.

பிரதமை-பாவியாயிருப்பாள், துவிதியை-பாக்கியவதி யாயிருப்பாள், திரிதிகை-குழந்தைகளைப்பெறுவாள், சதுர்த்தி-பலபுருஷரைஇச்சிப்பாள், பஞ்சமி-நன்மையுடையவள், சஷ்டி-சண்டைக்காரியாயிருப்பாள், சப்தமி-புத்திரபாக்கிய முண்டாயிருப்பாள், அஷ்டமி-ராட்சசியாயிருப்பாள், நவமி - கிலேசமாயிருப்பாள், தசமி-புத்திரபாக்கியமுண்டாயிருப்பாள், ஏகாதசி - சுபகரமாயிருப்பாள். துவாதசி - பலரையுந்தூஷிப்பாள், திரயோதசி நல்லதேஜசுஉண்டாயிருப்பாள், சதுர்த்தசி-பாவஞ்செய்பவளாயிருப்பாள், பௌர்ணமி-அசல்வீடுதிரிவாள், அமவாசை- தரித்திரமாயிருப்பாள்.

நட்சத்திரபலாபலன்- நொண்டிச்சிந்து

அசுவணி-சுகரமாய், பரணி-ஆகாது அயல்வீடுவாழப்போருக்காள், கிர்த்திகை-தரித்திரமாம், ரோகணிகுச் - கிளிபோலே மதலைகள்மிகப்பெறுவாள், மிருகசீரிடமானால் மிகச்சிகர முடையவளாயிருப்பாள், திருவாதிரை-தரித்திரமாம், நல்லதிடமான் புனர்பூசம்-பதிவிரதை, பூசம்-பதிபட்சமுடையாள், ஆயிலியம் ஆகாதுமெத்தவுங்கபடியடா, மகம்-புத்திரநாசமடையாள், பூரமென்ற-நட்சத்திரமாகாது கெர்ப்பநஷ்டமாம், உத்திரத்தில்-தனதான்யம். அஸ்தமது-உரவுபந்துக்களை ரட்சித்திடுவாள். சித்திரைக்குப்-பதிவிரதை, அந்தசுவாதி-வெகுபுத்திருண்டாயிருப்பாள், விசாகம்-அழிக்குடையாள், அனுஷம் - விட்டுப்பிரியாள் கொண்டகணவனையே' கேட்டையில்-ருதுவானால் மெத்தகெடுதிடடா முற்றுஞ்சிறையிருப்பாள், மூலம்-புத்திருண்டு, பூராடம்-முழுதும்விசனத்தால்-ஆழ்கியிருப்பாள், உத்திராடம்-சர்பத்துடையாள், திரிவோணம்-ஒழியாதபாக்கியத்தில் வாழ்ந்திருப்பாள், அவ்விட்டம்-பிள்ளைகளுண்டு- சதையம்-ஆயிசுபூர்ணமுடையவளாம், உத்திரட்டாதியென்ற - நட்சத்திரம் உல்லாசமாகவே வாழ்ந்திருப்பாள். ரேவதிக்கி - சகலசுகம் உள்ளவும் ரொப்பவும பெருமையாய் வாழ்ந்திருப்பாள்.

யோக பலாபலன்.

விஷ்கம்பம்-விசனமுண்டாயிருப்பாள், பிரீதி-சந்தோஷமுண்டாயிருப்பாள், ஆயுஷ்மான்-தீர்க்காயுளுண்டாயிருப்பாள், சௌபாக்கியம்-சம்பத்துண்டாயிருப்பாள், சோபனம், மங்களகரமாயிருப்பாள்' அதிசண்டம் பாவியாயிருப்பாள், சுபகர்மம்-சுகமாயிருப்பாள், திரிதி-தைரியமாயிருப்பாள், சூலம்-துர்மரணமுண்டாயிருப்பாள், கண்டம்-பாவியாயிருப்பாள், விருத்தி-நன்மையு

ண்டாயிருப்பாள், துருவம்-பதிவிரதையாயிருப்பாள், வியாகாதம் விதவையாவாள், அரிஷணம்-போகியாயிருப்பாள், வச்சிரம்-நல்லுருபவதியாயிருப்பாள், சித்தி-நல்சம்பத்துண்டாயிருப்பாள் விதிபாதம் - கொடியவிசனமாயிருப்பாள், வரியான் - தாமசிந்தனைவளாயிருப்பாள், பரிகரம்-உருவுக்குப்பகையாயிருப்பாள், சிவம்-நல்லவளாயிருப்பாள், சித்தம் - திரவியமுண்டா யிருப்பாள், சாத்தியம் - போகபாக்கியமாயிருப்பாள், சுபம்-சந்தோஷமுண்டாயிருப்பாள், சுப்பிரம்-வியாதியால் மரணமாவாள், வைதிருதி உயிர்வதைசெய்வாள்

கரணபலாபலன்.

பவம்-சுகமுண்டாயிருப்பாள், பாலவம்-சௌபாக்கியவதியாயிருப்பாள், கரசி-விதவையாவாள், வணசி-கொள்ளக் கொடுக்க வல்லவள், சதுஷ்பாதம் - சந்தோஷமில்லாதவள், நாகவம்-நன்மையில்லாதவள், கிமஸ்துக்கினம்-தரித்திரமாயிருப்பாள்.

ஏழாமிடப்பலாபலன்

சூரியன்-விதவையாவாள், சந்திரன்-குழந்தைகளையிழப்பாள், செவ்வாய்-வேசையாவாள், புதன்-மலடியாவாள், குரு-பாக்கியமில்லாதவளாயிருப்பாள், சுக்கிரன்-வீடுவிட்டுப்போவாள், சனி வியாதியாயிருப்பாள், இராகு-புத்திரனையிழப்பாள், கேது-உறவுக்குப்பகையாயிருப்பாள்.

நாழிகைபலாபலன்

௰-நாழிகையுள்ளாகில் உத்தமம், உ௰-நாழிகை யுள்ளாகில் மத்திமம், ௩௰-நாழிகையுள்ளாகில் அதமம்,

காலபலா பலன்.

பிராதக்காலமானால்-சுபம், முற்பகலானால்- தீர்த்தயாத்திரை மத்தியானமாகில்-புத்திரசம்பத்துண்டு, பிற்பகலானால்-சோரத்துவம், சாயங்காலமாகில்-வெகுபுத்திரருண்டு, அஸ்தமானத்தில்-வேசையாவாள், முன்னிராத்தி- தீர்க்காயுளுண்டு, நடுஇராத்திரி-விதவையாவாள், பின்னிராத்திரியில்-சுகமில்லாதவள், சந்திகளில்-பாக்கியமற்றவள்.

(ஸ்தனக்குறிப்பு) சாயங்காலமாகில் சூப்பிணுங்கிபோலிருப்பாள்
அர்த்தராத்திரியாகில்-இரண்டுஞ் சுருகிப்போம்.

ஜாமபலாபலன்.

க-வது—ஜாமமாகில சுபமாயிருப்பாள்
உ-வது—ஜாமமாகில் சுபகரமாயிருப்பாள்
௩-வது—ஜாமமாகில் மங்கிலியமுண்டு
ச-வது ஜாமமாகில் பலரையும்வேண்டுவாள்

ஜாமஸ்தனக் குறிப்பு.

க-வது ஜாமம் ஏந்துங்கொங்கையுண்டு
உ-வது ஜாமம் குத்துமுலையுண்டு
௩-வது ஜாமம் சாய்ந்தமுலையுண்டு
ச-வது ஜாமம் சரிந்தமுலையுண்டு

ருதுஸ்திரீ வஸ்திரக் குறிப்பு.

நைத்ரால் சிகப்புபுடவை. கோபியாகில்-வெள்ளைபுடவை

நாணமாகில்-கறுப்புபுடவை. ஷெ விந்துவிடயலாபலன்

வட்டமாகில்-பொருள்சேரும், சதுரமாகில் - சத்துருநாசம், பிறைபோலாகில்-ஆயுசு குன்றும், நீண்டிருந்தால்மரணம், வண்டுபோலிருந்தால்-புத்திரருண்டு,

(தோஷபலாபலன்) ய-வது நாழிகையால் புருஷனுக்காகாது

உ-வது நாழிகையாகில் திரவியநாசம்

ங-வது நாழிகையாகில் தரித்திரமாயிருப்பாள்

நட்சத்திரகுணம்.

அசுவனி ரோகணி-மிருகசீரிடம்-பூசம்-உத்திரம்-அஸ்தம்-சித்திரை - சுவாதி-விசாகம்-அனுஷம்-மூலம்-திருவோணம்-அவிட்டம்-சதயம்-உத்திரட்டாதி-இரேவதி- இப்பதினாலும்-உத்தமம்-

மகம்-திருவாதிரை-கார்த்திகை-கேட்டை-புனர்பூசம் - பூசம் இவ்வைந்தும்மத்திமம் மற்றவை அதமமென்பதாம்.

{ ருதுவானவள் கட்டியிருந்த சேலையைப்பார்த்து
இன்னதிசையில் ஆணென்ன தெரிந்துகொள்ளல் }

கிழக்கு கிழிந்தபுடவையுடையவள்

தென்கிழக்கு பச்சைப்புடவையுடையவள்

தெற்கு சிகப்புப்புடவையுடையவள்

தென்மேற்கு வெள்ளைப்புடவையுடையவள்

மேற்கு அழுக்குப்புடவையுடையவள்

வடமேற்கு கறுப்புப்புடவையுடையவள்

வடக்குபஞ்சவர்ணப்புடவையுடையவள்

ஷெபலாபலன்

கிழிந்தபுடவையானால்-கலகம்பச்சைபுடவையானால்-தரித்திரம் சிகப்புபுடவையாகில்-வியாதி வெள்ளைப்புடவையானால்- சந்தானம் அழுக்குப்புடவையானால்-கன்மைகறுப்புபுடவையானால்நன்மை பஞ்சவர்னபுடவை-தரித்திரம் சரிகைபஞ்சைப்புடவை-சுகம்

(பிந்தாரூடம்)கிழக்கு-ங-துளிகண்டிருக்கும் மேற்கு-ச.துளி

தென்கிழக்கு-ரு-துளிகண்டிருக்கும்வடமேற்கு-ங-துளி

தெற்கு-ச-துளிகண்டிருக்கும் வடக்கு-சு-துளி

தென்மேற்கு-உ-துளி-கண்டிருக்கும்வடகிழக்கு-ச-துளி

(ஷெபலம்)ஒற்றையாகில் ஆண்குழந்தைகள், இரட்டையாகில் பெண்குழந்தைகள்

(புத்திராரூடம்)கிழக்கு-உபுத்திரர்	மேற்கு-சு புத்திரர்
தென்கிழக்கு-க-புத்திரர்	வடமேற்கு-ங-புத்திரர்
தெற்கு-அ-புத்திரர்	வடக்கு-சு-புத்திரர்
தென்மேற்கு-ச-புத்திரர்	வடகிழக்கு-ய-புத்திரர்
ஒற்றையாகில்சம்பத்துண்டு	இரட்டையாகில்ரோகமுண்டு

விஷேகமுகூர்த்தகால அளவு

பரணியில்ருதுவானல்-ய-மாதமும்-பூருடத்தில் ருதுவானால் அ-மாதமும் மகம்-யஉ-மாதமும் திருவாதிரை-பூசம்-இவைகளுக்கும்-சு-மாதமும்-ஆயிலியம்-கார்த்திகை-கேட்டை-இதுகளுக்கு

௪-பாதமும்-உத்திரம்-௫-மாதமும்-அதற்குமேல் புருஷன்பார்த்தால்தோஷ மில்லையென்பதாம்பலதானப் பிரயத்நஞ்செய்யலாம்

ஒருபெண் கொள்ளவேணுமானால் சுபலட்சணங் கூறியது

1-வது ஒருபெண் கொள்ளவேணுமென்றால் அப்பெண்ணுக்குரிய சுபலட்சணமும் அவலட்சணமுங் கூறுகிறதாம்,

அப்பெண்ணினது கூந்தலானது கோரைப்புல்லு போல் நீண்டிருந்தால் அதனால் குடிப்பழுது நேருமென்று பெரியோர் கூறுகின்றார்.

மேற்படி கூந்தல் பாம்பையாயும் பரட்டையாயுமிருக்குமாகில் பழுதில்லையாம் இது சுபலட்சணமெனக்காண்க,

மேலும் சுருட்டைமயிரிருக்குமாகில் அக்குடும்பம் விர்த்தியாகும் விபசாரசந்தேகம்.

ஏறுநெற்றியும் மிரண்டபார்வையும் திரண்டநாசியும் வேப்பிலைபோல் வளைந்தபுருவமும் பிடிக்குளடங்கிய கழுத்தும் பொருந்தியிருப்பாளாகில் பூரணவாழ்வு வாழ்வாளென்பது சந்தேகமில்லையாம்.

அதிலும் மேற்படி நெற்றியில் பாவட்டையின் பக்கங்களில் முன்சுழியொன்றிருக்குமாகில் மூத்தாருக்காகாதென்றும் பின்பக்கங்கழுத்தப்பிடரில் பின்சுழியிருக்குமாகில் அப்பெண் அமங்கிலியவாளென்றும் முன்னோர் கூறுகின்றார்

வயிற்றில் தொப்புள்தொடங்கி மார்புக்குழிபரியந்தம் ரேகையிருக்குமாகில் வாழ்வுகுறையுமென்பது உண்மையாம்,

இடதுபக்கத்து இடுப்பு மேற்சொல்லியபடி இருக்குமாகில் அவள்யாதொரு குறைவில்லாமல் புத்திரபாக்கியமுந் தனசம்பத்தும் தானியசம்பத்தும் தீர்க்கம் ஆயுசாய்வாழ்வாளாம்.

துடைகளிரண்டில் வலதுதுடையில் சக்கிரியாவது பாம்பின்படமாவது இருக்குமாகில் அப்பெண்ணின்வாழ்வுதாழ்வாகும்

மேற்படி துடையில் மச்சங்களாவது உண்டாயிருக்குமாகில் தரித்திரவழியா இருப்பாள்

இடதுதுடையில் மேற்சொல்லியசக்கிரம்பு அப்பாம்பின்படமிருப்பதுமன்றி மச்சமொன்றிருக்குமாகில்துன்பத்தைக்கொடுக்காது நன்மையேதருமென்பார்

அப்பெண் காலையுதறிநடப்பாளாகில் அவள்குடும்பம்நசித்துப்போமென்று சொல்லுவார்

அவள் நடக்கும்போது கால்நட்டம் ஒடியுமானால் அதுதரித்திரத்துக் கிடமாகுமென்றுரைப்பார்

அவள்நடக்கும்போது அமர்ந்தநடையுங் குளிர்ந்தமொழியும் உடையவளாயிருப்பாளாகில் அவள்குடும்பவிர்த்தியால் நீடித்துவாழ்வாளென்று அறிவுளோர்சொல்லுவார்.

பெண்கள் இலட்சணம் முற்றிற்று.
